அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு புரட்டாசி - ஐப்பசி அக்டோபர் 2017 முரசு 11 ஒலி 124



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# ஆன்மீக சத்சங்க விழா





- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம்
- ஜோதி தியானம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

**நாள்:** 12.11.2017, ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:** காலை 6:30 மணி முதல் பிற்பகல் 1:30 மணி வரை

**இடம்:** ஸ்ரீ குகா திருமண மண்டபம்,
25 & 26, காந்தி ரோடு, ஆழ்வார் திருநகர்,
சென்னை - 600087.

**தொடர்புக்கு:** 7502026565, 9865229035

# அருள் பூரண சித்தி யோகம்

ஒரு நாள் தியான முகாம்...



தன்னையறிந்து இன்பமுறு...

- மன அழுத்தம், வேதனை, மனக்கவலை நீங்க
- நோய்களில் இருந்து விடுபட
- வாழ்க்கையில் பேரின்பம் அடைய

**ஜீவகாருண்யம், பக்தி, தியானம், சத்சங்கம்...**

இவற்றில் மூழ்கி திளைத்திட ஓர் அரிய வாய்ப்பு

**நாள்:** 19.11.2017 ஞாயிறு (ஒருநாள் முழுவதும்)

**நேரம்:** காலை 6:30 மணி முதல் இரவு 7:00 மணி வரை

**இடம்:** சுப்புலக்ஷ்மி மஹால்,
SH 94, R.P.புதூர், திருச்செங்கோடு ரோடு,
நாமக்கல் - 637 001.

**செல்:** 75020 26565, 98652 29035, 98659 14040

# ஆணையிட்டு மொழிந்தவர்கள்

**நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப**

என்பது தொல்காப்பியம். இதனை அப்படியே அடியொற்றுவது போன்று திருவள்ளுவர்

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்.**

என்கிறார்.

நிறைமொழி மாந்தராவார் வாக்குப் பலிதமுள்ளவர்கள். சொன்ன சொல் சொன்னவாறே பலிக்கும் ஆற்றல் பெற்றவர்கள்.

சம்பந்தரும் வள்ளலாரும் நிறைமொழி மாந்தர்கள். தங்கள் வாக்கை ஆணையிற் கிளந்தவர்கள்.

ஞானசம்பந்தப் பெருமான் தமதுவாக்கை நான்கு இடங்களில் ஆணையிட்டுரைக்கிறார்.

**“நனிபள்ளி உள்க வினைகெடுதல் ஆணை நமதே”**
**“சொல் மாலை ஓதும் அடியார்கள்**
**வானில் அரசாவர் ஆணை நமதே”**
**“சிந்தை செய வல்லவர்கள்...அந்த உலகெய்தி**
**அரசாளும் அதுவே சரதம் ஆணை நமதே”**
**“நவில்வார்...வானிடை வாழ்வார் மணிமிசைப்பிறவார்**
**மற்றிதற்(கு) ஆணையும் நமதே”**

சம்பந்தர் ஞானம் பெற்ற அன்றே - அப்போதே - பாடத் தொடங்கினார். மறுநாள், இரண்டாம் நாள் திருக்கோலக்காவைத் தரிசித்துப் பாடினார். மூன்றாம் நாள் திருநனிபள்ளியைத் தரிசித்துத் திருகடைக்காப்பில் “நனிபள்ளி உள்க வினைகெடுதல் ஆணை நமதே” என்று ஆணையிட்டுப் பாடுகிறார். திருநனிபள்ளி, பிள்ளையாரின் தாயார் பிறந்த ஊர்.

ஞானம்பெற்ற மூன்றாம் நாளிலேயே, தந்தையாரின் தோளில் அமர்ந்து யாத்திரை செய்யும் மூன்றாண்டுக் குழந்தைப் பருவத்திலேயே பாடும் பாட்டில் ஆணையிட்டுப் பாடுகிறார் என்றால் சம்பந்தரின் அருட்திறத்தை என்னென்று சொல்வது!

சம்பந்தரைப் போன்றே வள்ளலாரும் ஆணையிட்டுரைக்கிறார். வள்ளலார் ஆணையிட்டு உரைக்கும் இடங்கள் பல.

வள்ளற்பெருமான் ஆணையிட்டுரைக்கும் இடங்கள் பலவிதம்

போன்றே ஆணையிட்டுரைக்கும் வகைகளும் பல.

1. தன்மீது ஆணையிட்டு உலகினோர்க்கு உரைத்தல்
2. தன்மீதும் இறைவன்மீதும் ஆணையிட்டு உலகினோர்க்கு உரைத்தல்
3. தன்மீது ஆணையிட்டு தன் நெஞ்சுக்கு கூறல்
4. குருமீதும் இறைவன்மீதும் ஆணையிட்டு தன் நெஞ்சுக்கு கூறல்
5. தன்மீது ஆணையிட்டு இறைவனிடம் விண்ணப்பித்தல்
6. இறைவனின் அருள்மீது ஆணை செய்து விண்ணப்பித்தல்
7. இறைவன்மீது ஆணையிட்டு விண்ணப்பித்தல்
8. இறைவன் தன்மீது ஆணையிட்டு வள்ளலாருக்கு உறுதி உரைத்ததாக வரும் பாடல்களும் உண்டு. அவற்றை காண்போம்

## *தன்மீது ஆணையிட்டு உலகினோர்க்கு உரைத்தல்:*

**எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே**
**எல்லாம்வல் லான்தனையே ஏத்து**

என்று வள்ளற்பெருமான் ஆணையிட்டுக் கூறிய குறள் வெண்பா பெருமானது திருவாயிற் பிறந்ததுமுதல் இன்று வரை பல்லாயிரக் கணக்கான சன்மார்க்க அன்பர்களால் மந்திரமொழியாகப் பெரிதும் பயிலப்பெற்று வருவது கண்கூடு.

## *தன்மீதும் இறைவன்மீதும் ஆணையிட்டு உலகினோர்க்கு உரைத்தல்:*

**சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது**
**தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடும் கேட்பீர்**
**என்மார்க்கத் தெனைநுமக்குள் ஒருவனெனக் கொள்வீர்**
**எல்லாம்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்**
**புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே**
**புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்**
**தன்மார்க்க மாய்விளங்கும் சுத்தசிவம் ஒன்றே**
**தன்ஆணை என்ஆணை சார்ந்தறிமின் ஈண்டே.**

## *தன்மீது ஆணையிட்டு தன் நெஞ்சுக்கு கூறல்:*

**பாடற் கினிய வாக்களிக்கும் பாலும் சோறும் பரிந்தளிக்கும்**
**கூடற் கினிய அடியவர்தம் கூட்டம் அளிக்கும் குணம்அளிக்கும்**
**ஆடற் கினிய நெஞ்சேநீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்**
**தேடற் கினிய சீர்அளிக்கும் சிவாய நமஎன் றிடுநீறே.**

## *குருமீதும் இறைவன்மீதும் ஆணையிட்டு தன் நெஞ்சுக்கு கூறல்:*

**இதுதருணம் நமையாளற் கெழுந்தருளுந் தருணம்**

இனித்தடைஒன் றிலைகண்டாய் என்மனனே நீதான்
மதுவிழுமோர் ஈப்போலே மயங்காதே கயங்கி
வாடாதே மலங்காதே மலர்ந்துமகிழ்ந் திருப்பாய்
குதுகலமே இதுதொடங்கிக் குறைவிலைகாண் நமது
குருவாணை நமதுபெருங் குலதெய்வத் தாணை
பொதுவில்நடம் புரிகின்ற புண்ணியனார் எனக்குள்
புணர்ந்துரைத்த திருவார்த்தை பொன்வார்த்தை இதுவே.

*தன்மீது ஆணையிட்டு இறைவனிடம் விண்ணப்பித்தல்:*

உன்ஆணை உன்னைவிட உற்றதுணை வேறிலைஎன் உடையாய் அந்தோ
என்ஆணைக் காத்தருளி இத்தினமே அருட்ஜோதி ஈதல் வேண்டும்
அந்நாணை யாதபடி அருள்புரிந்த பெருங்கருணை அரசே என்னை
முன்னாள்நின் அடியவன்என் றுலகறிந்த இந்நாள்என் மொழிந்தி டாதே.

*இறைவனின் அருள்மீது ஆணை செய்து விண்ணப்பித்தல்:*

நன்றே தருந்திரு நாடகம் நாடொறும் ஞானமணி
மன்றே விளங்கப் புரிகின்ற ஆனந்த வார்கழலோய்
இன்றே அருட்பெருஞ் சோதிதந்து ஆண்டருள்; எய்துகணம்
ஒன்றே எனினும் பொறேன்அரு ளாணை உரைத்தனனே.

*இறைவன்மீது ஆணையிட்டு விண்ணப்பித்தல்:*

ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஐயா
அரைக்கணமும் நினைப்பிரிந்தே இனித்தரிக்க மாட்டேன்
கோணைநிலத் தவர்பேசக் கேட்டதுபோல் இன்னும்
குறும்புமொழி செவிகள்உறக் கொண்டிடவும் மாட்டேன்
ஊணைஉறக் கத்தையும்நான் விடுகின்றேன் நீதான்
உவந்துவராய் எனில்என்றன் உயிரையும்விட் டிடுவேன்
மாணைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்நீ எனது
மனம்அறிவாய் இனம்உனக்கு வகுத்துரைப்ப தென்னே.

*இப்பாடல் ஆணை உன்மேல் ஆணை உன்மேல் ஆணை உன்மேல் என்று இறைவன் மீது ஒன்றுக்கு மூன்று முறையாக ஆணையிட்டு விண்ணப்பித்த பாடல்.*

*இறைவன் தன்மீது ஆணையிட்டு வள்ளல் பெருமானாருக்கு உறுதி உரைத்ததாக வரும் பாடல்களும் உண்டு:*

ஆணை ஆணைநீ அஞ்சலை அஞ்சலை
அருள்ஒளி தருகின்றாம்
கோணை மாநிலத் தவரெலாம் நின்னையே
குறிக்கொள்வர் நினக்கேளம்

**ஆணை அம்பலத் தரசையும் அளித்தனம்**
**வாழ்கநீ மகனேஎன்**
**றேணை பெற்றிட எனக்கருள் புரிந்தநின்**
**இணைமலர்ப் பதம்போற்றி.**

*இப்பாடல் இறைவன் தன்மீது ஆணையிட்டு வள்ளல் பெருமானாருக்கு உறுதி உரைத்த பாட்டு. வள்ளல் பெருமானாரை போன்றே இறைவனும் இதில் மூன்று முறை ஆணையிட்டுரைக்கிறார். 'ஆணை' 'கோணை' என்று எதுகை மோனைகள் கூட இவ்விரு பாடல்களிலும் ஒன்றை ஒன்று படியெடுத்தாற் போல ஒன்றாக அமைந்துள்ளன. பிறவகை ஆணைப் பாடல்களைத் திருவருட்பாவில் ஆங்காங்கே காண்க. இங்கெடுத்துக் காட்டப் புகின் மிக நீளும்.*

*"ஆணை" என்பதைப் போன்றே "சத்தியம்" என்பதும் வள்ளல் பெருமானார் வாக்கில் மிகுதியாகப் பயின்று வருகிறது. திருவருட்பாவில் முதல் திருமுறையிலிருந்து ஆறாம் திருமுறை வரை சத்தியம் வருமிடங்கள், சத்தியம் செய்யுமிடங்கள் பல. ஒரு முறை சத்தியம், இருமுறை சத்தியம், மும்முறை சத்தியம், நான்கு முறை சத்தியம், ஐந்து முறை சத்தியம் எனச் சத்தியமிடும் வகைகளும் பல.*

*ஆறாம் திருமுறையில் "தலைவி கூறல்" என்னும் பதிகத்தின் பத்துப்பாடல்களிலும்*

**"சத்தியம் சத்தியம் மாதே, சத்தியம் சத்தியமே"**

*என்பது மகுடமாக (ஈற்றுத் தொடராக)த் திகழ்கிறது. இவை நான்கு முறை சத்தியம் பெற்ற இடங்கள்.*

*ஆறாம் திருமுறை அனுபவநிலையில் ஆறாம் பாடலின் ஈற்றடி முழுவதும்,*

**புத்தியஞ் சேல்சற்றும் என்நெஞ்ச மேசிற் பொதுத்தந்தையார்**
**நித்தியஞ் சேர்ந்த நெறியில் செலுத்தினர் நீஇனிநன்**
**முத்தியும் ஞானமெய்ச் சித்தியும் பெற்று முயங்கிடுவாய்**
**சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியமே.**

*என்று ஐந்து முறை சத்தியம் செய்யப்பெறுவது.*

*திருவருட்பாவின் ஈற்றுப் பதிகங்களாக ஆறாந் திருமுறையின் நிறைவிலுள்ள இருபதிகங்கள் "சத்திய வார்த்தை", "சத்திய அறிவிப்பு" ஆகிய இரண்டுமாகும். "சத்திய வார்த்தை" என்னும் தலைப்பும் "சத்திய அறிவிப்பு" என்ற குறிப்பும் மூலங்களில் வள்ளற்பெருமான் தம் கைப்பட எழுதியவை (திருக்கரஞ் சாத்தியவை). சுருங்கக் கூறின் திருவருட்பா சத்தியத்தில் நிறைவு பெறுகிறது. வள்ளல் பெருமானார் வாக்கு சத்திய வாக்கு.*

**திருச்சிற்றம்பலம்**

# மூத்தோர்சொல் அமிர்தம்

ஓர் ஆசிரமம். அதனைச் சுற்றி ஏராளமான மரம், செடி கொடிகள். நிறைய மாமரங்கள். அவற்றில் நிறைய மாம்பழங்கள். அந்த ஆசிரமத்தைக் கடந்து சென்றால் அங்கே ஒரு பள்ளிக் கூடம்.

தினமும் அந்த ஆசிரமத்தின் வழியாகத்தான் பிள்ளைகள் போவார்கள், வருவார்கள். காலையில் அந்த வழியாக மாணவர்கள் போவதையும் மாலையில் அந்த வழியாக அவர்கள் திரும்புவதையும் ஆசிரமத்தில் இருந்த ஒரு பெரியவர் கவனித்துக்கொண்டிருப்பது வழக்கம்.

அந்த பெரியவர்க்கு ஓர் ஆச்சரியம்!

மாணவர்கள் காலையில் அந்த வழியாகப் போகிறபோது அங்கே இருந்த மாமரத்தைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. ஒழுங்காகப் போவார்கள்.

ஆனால், மாலையில் திரும்புகிறபோது அப்படி இல்லை. அந்தச் சமயத்தில் அவர்கள் குணம் முற்றிலும் மாறிவிடும். மாமரத்தைப் பார்ப்பார்கள். அதிலே இருக்கும் கனிகளை கவனிப்பார்கள். ஆளுக்கொரு கல்லைக் கையில் எடுத்துக் கொள்வார்கள். மாம்பழங்களைக் குறிவைத்து எறிவார்கள். பழங்கள் கீழே விழும். ஓடி ஓடிப் பொறுக்கிக் கொள்வார்கள்.



ஒரே சிரிப்பும் கும்மாளமுமாக இருக்கும். பெரியவர் யோசிக்க ஆரம்பித்தார்.

காலையில் ஒழுங்காகப் பள்ளிக்குப் போகும் மாணவர்கள் மாலையில் மட்டும் ஏன் இப்படி குறும்புக்காரர்களாக மாறிவிடுகிறார்கள்!

அவருக்குப் புரியவில்லை. ஒருநாள் ஒரு மாணவனைக் கூப்பிட்டார்.

அவன் வந்தான். “தம்பி! காலையில் ஒழுங்காக அமைதியாகப் போகிறீர்கள் மாலையில் மட்டும் இப்படிக் கல் எறிந்து குறும்பு செய்கிறீர்களே...ஏன்?” என்று கேட்டார்.

அந்தச் சிறுவன் சொன்னான். “காலையில் நாங்க சரியாக நேரத்துக்குப் பள்ளிக்கூடம் போகலேன்னா வாத்தியார் அடிப்பார். ஆனா, சாயந்தரம் அப்படி இல்லே... வீட்டுக்கு எப்ப வேணாலும்

போகலாம்! அதனால மாம்பழத்தை அடிச்சி எடுத்துக்கிட்டு வீட்டுக்குப் போறோம்!'' என்று சொல்லிவிட்டு அவன் ஓடிவிட்டான்.

பெரியவர் சிந்தித்தார். அவருக்கு ஓர் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது.

“இந்தப் பிள்ளைகள் காலையில் இந்த வழியாகப் போகிறபோது... அவர்களுக்கு முன்னால் ஒரு நோக்கம் இருந்தது. இலட்சியம் இருந்தது. அதை அடைவதற்காக அவர்கள் செல்கிறார்கள். மாணவர் திரும்புகிறபோது அது இல்லை. அதனால் இப்படி நடந்து கொள்கிறார்கள்.”

**பாலனாய் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்**
**மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து**
**கோலனாய் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்**
**சேல்உலாம் பழனவேலித் திருக்கொண்டீச்சரத்து உளானே.**

**– அப்பர் சுவாமிகள் தேவாரம்**

---

அது ஒரு வளமான நாடு. அந்நாட்டு அரசனான பத்மநாதன் மக்களின் நலமறிந்து நல்லாட்சி புரிந்து வந்தான். அவன் ஒருநாள் தன் மகளின் மீதுள்ள அன்பிற்கு அடையாளமாக அவள் மகிழும்படி விலை மதிப்புள்ள வைரத்தால் ஆன ஒரு பதக்கமாலையை (நெக்லஸ்) பரிசாக அளித்தான். அதைப்பெற்ற இளவரசி பெரு மகிழ்ச்சி அடைந்தாள்.

வாரம் ஒன்று ஓடியது. அன்று தன் அறையில் கழற்றி வைத்த பதக்கமாலை காணவில்லை என்று இளவரசி அரசரிடம் மிகவும் வருத்தத்துடன் கூறினார். அரசர் தன் காவலர்களைக் கொண்டு அரண்மனை முழுவதும் தேட செய்தார். அப்படியும் கிடைக்கவில்லை.

காணாமல்போன பதக்க மாலையை நாடு முழுவதும் மக்களைக் கொண்டு தேட செய்தார். அரண்மனையில் இருந்த அறிஞர்களில் சிலர் பதக்கமாலையை பறவைகள் கவர்ந்து சென்றிருக்கலாமென்று கூறினர். இதனால் அரசர் “யார் பதக்க மாலையை தேடிக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கு 50,000 பொன் சன்மானமாக வழங்கப்படும்'', என்று நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.



வணிகர் ஒருவன் வியாபார நிமித்தமாக வெளியூர் பயணம் மேற்கொண்டான். அப்போது அவன் தன் நாட்டின் நகர்புரத்தை கடக்கும் வழியில் அழுக்குநீர் தேங்கிய குட்டை ஒன்று அவன் கண்ணில் தென்பட்டது. அந்த குட்டையில் இருந்து கண்களைப் பறிக்கும் ஒளி வீசியது. அருகில் சென்று பார்த்ததும் இளவரசியின் வைரப்பதக்க மாலைதான் இது என்பதை கண்டு கொண்டான். அந்த

குட்டை மிகவும் அழுக்காகவும் துர்நாற்றத்துடனும் இருந்தது. ஆனால் 50,000 பொன் சன்மானம் கிடைக்குமே என்ற ஆசையில் கையை அழுக்கு குட்டையில் விட்டு வைரப்பதக்க மாலையை எடுக்க முயற்சி செய்தும் நழுவவிட்டான்.

இரண்டாம் முறையாக தன் கால்களையும் அழுக்கு குட்டைக்குள் வைத்து கைகளையும் நன்றாக நீட்டி பதக்கமாலையை எடுக்க முயன்றான். இம்முறையும் பதக்கமாலை அவன் கைகளில் இருந்து நழுவியது. அந்த வணிகர் 50,000 பொன் சன்மானத்தின் மீதுள்ள ஆசையினால் இனிமேல் காலம் தாழ்த்தக் கூடாது என்று இம்முறை அழுக்கு குட்டைக்குள் குதித்தே விட்டான். இப்போதும் அவன் அதை எடுக்க தவறினான்.

அவன் அலுப்புடனும், விரக்தியுடனும் காணப்பட்டான். அப்போது ஒரு துறவி அந்த வழியே வந்தார். அந்த வணிகரின் பரிதாபமான நிலையைக் கண்டு, "என்னாயிற்று உனக்கு?" என்று கேட்டார். அந்த துறவியிடம் உண்மையை சொன்னால் அவர் அந்த பொருளை கவர்ந்து கொள்வாரோ, என்று எண்ணிக்கொண்ட இவன் அவரிடம், "ஒன்றுமில்லை எனக்கு" என்று கூறினான். பின்னர் ஒருவாறு அவன் அந்த துறவியின் மேல் நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு நடந்தவற்றை அவரிடம் கூறினான். அவன் கூறியதைக்கேட்ட துறவி அவனிடம், "நீ தண்ணீருக்குள் இறங்கும்போது குட்டையை கவனிக்காமல் மேலுள்ள மரத்தின் கிளைகளைப் பார்த்து முயற்சி செய்" என்றார்.

அவனும் துறவியின் அறிவுரைப்படி மேலுள்ள கிளையை பார்த்துக் கொண்டு குட்டையில் இறங்கினான். ஆச்சரியமாக தண்ணீரில் காணப்பட்ட பதக்கமாலை உண்மையில் மேலுள்ள மரத்தின் கிளையில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தான்.

இப்படித்தான் நாம் அனைவரும் இந்த வணிகரைப் போல் உலகியல் வாழ்க்கை என்கிற அழுக்கு குட்டைக்குள் வைர பதக்கமாலை என்கிற நிறைவான இன்பத்தை தேடிக்கொண்டேயிருக்கிறோம். ஆனால் இந்த உலகியல் இன்பம் அல்லது புலனின்பம் என்பது ஒரு க்ஷனநேரம் மட்டுமே நிலைத்து இருக்கும் நீர்க்குமிழி போன்றது. இதை நாம் மெய்யின்பம் என்று நம்பிக்கொண்டு தொடர்ந்து இதை அடைவதிலேயே வாழ்க்கையை கழித்து விடுகிறோம். நமக்கு எல்லாவற்றையும் படைத்து, காத்து, அழித்துக் கொண்டிருக்கிற கடவுளிடம்தான் அந்த நிறைவான இன்பம் உள்ளது என்பதை தெளிவுபடஉணர்ந்து கொள்ள வேண்டும். இதனையே இக்கதையில் பதக்கமாலை மேலே உள்ள மரக்கிளையில் இருப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது.

திருச்சிற்றம்பலம்

# சிற்றில் – பேரில்

*__ஜீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில் சீவஅறிவு__ விளக்க மில்லாமல் மயங்குகின்றது*

*அது மயங்கவே __அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம்__ மறை படுகின்றது*

*அது மறையவே __புருடதத்துவம்__ சோர்ந்து விடுகின்றது*

*அது சோரவே __பிரகிருதிதத்துவம்__ மழுங்குகின்றது*

*அது மழுங்கவே, __குணங்களெல்லாம்__ பேதப்படுகின்றன*

*__மனம்__ தடுமாறிச் சிதறுகின்றது; __புத்தி__ கெடுகின்றது; __சித்தம்__ கலங்குகின்றது; __அகங்காரம்__ அழிகின்றது; __பிராணன்__ சுழல்கின்றது; __பூதங்களெல்லாம்__ புழுங்குகின்றன; __வாத பித்த சிலேட்டுமங்கள்__ நிலைமாறுகின்றன; __கண்__ பஞ்சடைந்து குழிந்து போகின்றது; __காது__ கும்மென்று செவிடுபடுகின்றது; __நா__ உலர்ந்து வறளுகின்றது; __நாசி__ குழைந்து அழல்கின்றது; __தோல்__ மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது; __கை கால்__ சோர்ந்து துவளுகின்றன; __வாக்குத்__ தொனிமாறிக் குளறுகின்றது; __பற்கள்__ தளருகின்றன; __மலசலவழி__ வெதும்புகின்றது; __மேனி__ கருகுகின்றது; __ரோமம்__ வெறிக்கின்றது; __நரம்புகள்__ குழைந்து நைகின்றன; __நாடிகள்__ கட்டுவிட்டுக் குழைகின்றன; __எலும்புகள்__ கருகிப் பூட்டுகள் நெக்கு விடுகின்றன; __இருதயம்__ வேகின்றது; __மூளை__ சுருங்குகின்றது; __சுக்கிலம்__ வெதும்பி வற்றுகின்றது; __ஈரல்__ கரைகின்றது; __இரத்தமும் சலமும்__ சுவறுகின்றன; __மாமிசம்__ குழைந்து தன்மை கெடுகின்றது; __வயிறு__ பகீர் என்று எரிகின்றது; __தாப சோபங்கள்__ மேன்மேலும் உண்டாகின்றன; __உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களும்__ மேன்மேலும் தோன்றுகின்றன.*

*பசியினால் இவ்வளவு அவத்தைகளும் தோன்றுவது சீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றது.*

*இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்தபோது உண்டு பசி நீங்க நீங்குகின்றன.*

*அப்போது தத்துவங்களெல்லாம் தழைத்து உள்ளங் குளிர்ந்து அறிவு விளங்கி அகத்திலும் முகத்திலும் ஜீவகளையும் கடவுள்களையுந் துளும்பி ஒப்பில்லாத திருப்தியின்பம் உண்டாகின்றது.*

*இப்படிப்பட்ட இன்பத்தை உண்டுபண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்லலாம்?*

*இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை எந்தத்*

*தெய்வத்துக்குச் சரியென்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுள் அம்சமென்றே சத்தியமாக அறிய வேண்டும். இதனால்* ***நரக வேதனை, சனன வேதனை, மரண வேதனை என்கின்ற மூன்று வேதனைகளுங் கூடி முடிந்த வேதனையே பசிவேதனை*** *என்றும், அகம், புறம், நடு, கீழ், மேல் பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத* ***"மோக்ஷ இன்பமே ஆகாரத்தினாலுண்டாகும் திருப்தியின்பம்"*** *என்றும் அறியப்படும்.*

## விளக்கம்

***நரகவேதனை + ஜனனவேதனை + மரணவேதனை= பசிவேதனை***

*உணவு உண்டு, பசிவேதனை நீங்கிய திருப்தி இன்பமே மோட்ச இன்பம் என்கிறார்.*

***பசித்துன்பமே நரகம் உண்டு பசிநீங்கிய இன்பமே மோட்சம்*** *என்று மோட்ச நரகங்களுக்கு விளக்கமளித்தவர் வேறு யார்? ஜீவகாருண்ய சித்தராகிய வள்ளற்பெருமானாரால்தான் இப்படி ஒரு விளக்கத்தை அளிக்க முடியும்.*

*உலகத்தில் பசி என்ற ஒன்று இல்லாவிட்டால் ஒருவரை ஒருவர் (யாரும் யாரையும்) எதிர்பார்க்க மாட்டார்கள்.*

*எதிர்பார்ப்பதற்கு இல்லை என்றால் உபகாரச்செயலுக்கு இடமே இருக்காது.*

*உபகாரச் செயல்கள் இல்லை என்றால் ஜீவகாருண்யம் விளங்காது.*

*கடவுள் அருளைப்பெறுவதற்கு,* ***பசியும் கடவுளால் கொடுக்கப்பட்ட*** *ஓர்* ***உபகாரக்கருவி****யே.*

*பசியினால்தான் உயிர்வாழ்வே, உலகவாழ்வே இயங்குகிறது.*

*தன் பசியையும் ஆற்றி, பிற உயிர்களின் பசியையும் ஆற்றி, உயிர் கடவுள்நிலையை அடையவேண்டும்.*

*கடவுள் நிலையை அடைய பசி ஓர் உபகாரக்கருவி.*

***பசி - நரகம்***

*உணவு* ***(சோறு) - மோட்சம்***

***ஜீவகாருண்யம்,*** *பசிதவிர்த்தல்* ***மோட்ச சாதனம்.***

*"சோற்றானை சோற்றில் உறும் சுகத்தினானை" என்பது வள்ளற்பெருமான் அருளிய திருவருட்பா பாடல் ஒன்றில் வரும் ஒரு தொடர் (3947). "சோறு" என்ற சொல்லுக்கு இரண்டு பொருள் உண்டு. 1. உண்ணும் சோறு 2. முத்தி (மோட்சம்). இறைவன் சோறாக இருக்கிறான். (சோற்றான்). சோற்றில் உறும் சுகமாகவும் இருக்கிறான். (சோற்றுச்சுகம் - உணவுண்ட திருப்தி இன்பம்). சோறு*

*(முத்தி - மோட்சம்) அளிப்பவனாகவும் இருக்கிறான்.*

*“அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்” என்னும் தேவாரத்தில் அன்னம் என்பது சோறு, முத்தி.*

*“பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்” என்னும் திருவாசகத்தில் (321) சோறு என்பது முத்தி.*

*பசியினால் துன்புறுவோர் ஆகாரத்தைக் கண்ட காலத்தில் அடையும் மகிழ்ச்சியைப், பெற்றோர், மனைவி, மக்கள், நிலம், பொன், தங்க நகைகள் முதலியனவற்றைக் கண்ட காலத்தில் கூட அடையார்கள் என்றால்,* ***உண்ட*** *காலத்தில் உண்டாகும் மகிழ்ச்சி எப்படிப்பட்டதாக இருக்கும். கண்ட மகிழ்ச்சியே பெரிது என்றால், உண்ட மகிழ்ச்சியை என்னென்பது?*

*ஆதலால் ஆகாரத்தின் சொரூபம், ரூபம், சுபாவங்களைக் கடவுளருளின் சொரூபம் ரூபம் சுபாவங்களாகவே கருதவேண்டும் (ஸ்வரூபம் - அகவடிவம். ரூபம் - புறவடிவம். சுபாவம் - இயல்பு).*

*எது ஜீவகாருண்யம் என்பதைச் சொல்லுகிறார்.*

*பசி நெருப்பு - பசி என்ற விஷக்காற்று - பசி என்கிற புலி - பசி என்கிற விஷம் - பசி என்கிற தேள் - நேற்று இரவு பகலாகப் பசி - வெயிலேறிப்போகிறதே - இருட்டிப் போகிறதே - நடந்து நடந்து காலும் சோர்ந்தது - பகற்போதும் போய்விட்டது - முதற்பிறப்பில் நாம் செய்யவில்லை, இப்பிறப்பில் நமக்குச் செய்வாருமில்லை - நெருப்பில் நித்திரை - மனைவி மக்கள் பசி - குருடு, செவிடு, ஊமை, முடவர் பசி - என்று பசித்துன்பத்தையும் அதை நிவர்த்திக்கும் புண்ணியத்தையும் பல படியாக, பண்ணிப் பண்ணி விளக்கும் பாங்கு கல்மனத்தவரையும் உருகச் செய்வது.*

***“ஜீவதேகங்கள் என்கிற ஆலயங்கள்*** *பசியினால் பாழாகுந் தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே ஜீவகாருண்யம்” என்று கூறியுள்ளது அருமையிலும் அருமை.*

*‘மனித உடம்பை ஆலயம்’ (கோயில்) என்கிறார். பசியால் அவை பாழாகும்போது பசி தவிர்த்துப் பாழ்படாது உதவுவதைக் கோயில் திருப்பணி என்கிறார். ‘ஊனுடம்பு ஆலயம்’ என்னும் திருமூலர் வாக்கும், ‘காயமே கோயிலாக’ என்னும் அப்பர் வாக்கும் இங்கே நினைவுக்கு வரவில்லையா? உடம்பு கோயில் என்றால் அதைப் போஷிப்பது திருப்பணிதானே!*

*மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என்ற உயிர்கள் சன்மார்க்க ஒழுக்கத்துக்கு ஒத்து சத்துவ உணவால் பசி நிவர்த்தி செய்து கொள்ளத்தக்கவை. ஆனால் அவற்றின் “பசியையும் நிவர்த்திப்பதே*

*ஜீவகாருண்யம்" என்று இப்பகுதியை நிறைவு செய்கிறார்.*

*இவற்றிற்கு மாமிச ஆகாரம் என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. "புலை கொலை தவிர்த்தவர்கள் மட்டுமே உள்ளே புகுதல் வேண்டும்" என்று சத்தியஞானசபைக்கு நுழைவுக்கட்டுப்பாடு விதித்தபெருமான், சத்தியதருமச் சாலைக்கு அக்கட்டுப்பாட்டை விதிக்கவில்லை.*

*கடியாபட்டி இராமசச்சந்திரஞ் செட்டியார் (திருவருட்பா ச.மு.க.பதிப்பை அச்சிட்டு வெளியிட்ட புரவலர்) மோட்டார் வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். எதிரே ஒருவன் வலைப்பை நிறையைக் கொக்குகளை விற்பனை செய்து கொண்டு வந்தான். செட்டியார் வாகனத்தை நிறுத்தி அத்தனை கொக்குகளையும் வாங்கினார். உடனிருந்த வெள்ளைக்காரரர் தமக்கு விருந்து சமைக்க வாங்குவதாக நினைத்தார். வாகனத்திலிருந்து கீழே இறங்கிய செட்டியார் கொக்குகள் அத்தனையையும் வானில் பறக்கவிட்டார். அவை சிறகடித்துப் பறந்து சென்ற காட்சியைக்கண்டு வெள்ளைக்காரரும் உணர்ந்து மகிழ்ந்தார்.*

***கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களில் அனேகர் பசி, தாகம், பயம் முதலியவற்றால் மிகவுந் துன்பப்படுகின்றது என்னெனில்:***

*முன் தேகத்தில் ஜீவகாருணிய ஒழுக்கத்தை விரும்பாமல் கடினசித்தர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த ஜீவர்களாதலால், கடவுள் விதித்த அருளாக்கினைப்படி பசி, தாகம், பயம் முதலியவற்றால் மிகவும் துன்பப்படுகிறார்கள் என்றறியவேண்டும்.*

***முன்தேகம் உண்டென்பது எப்படி யென்னில்:***

*ஒரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்யவந்த சமுசாரி அதற்குமுன் வேறொரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்திருந்தானல்லது வீடில்லாமல் குடித்தனஞ் செய்யமாட்டான் என்றும், இப்போது வந்த வீட்டிலும் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு வீட்டில் குடிபோவான் என்றும் அறிவதுபோல்; இந்த தேகத்தில் ஆகாரக்கூலி கொடுத்துக் குடியிருக்க வந்த ஜீவன் இதற்கு முன்னும் வேறொரு தேகத்தில் அந்தக் கூலியைக் கொடுத்துச் சீவித்திருந்தானல்லது தேகமில்லாமல் சீவித்திருக்க மாட்டானென்றும், இந்தத் தேகத்திலும் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு தேகத்தில் குடிபோவானென்றும் துணியவேண்டும். ஆதலால், முன்னும் பின்னும் ஜீவர்களுக்குத் தேகங்கள் நேரிடும் என்றறியவேண்டும்.*

**<u>விளக்கம்:</u>** *ஜீவர்களில் பலர் பசி தாகம் முதலிய துன்பங்களை அனுபவிப்பதற்குக் காரணம் முற்பிறவியில் அவர்கள் ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாத கடினசித்த முடைய துன்மார்க்கர்களாக இருந்ததே*

என்கிறார். பூர்வஜன்மப் பயனை இந்த ஜன்மத்தில் அனுபவிக்கிறார்கள்.

முன்தேகம் - முற்பிறவி

குடிக்கூலி - வாடகை, (சென்னை வழக்கு மொழி)

ஆகாரக்கூலி - வாடகை கொடுக்கும் வரை, வாடகை வீட்டில் வாழலாம். உடம்பாகிய வீட்டில் குடியிருக்க உணவே வாடகை. ஆகாரக் கூலி என்ற சொல்லாட்சி அருமையானது. குடிக்கூலி என்ற சொல்லுக்கு இணையானது.

வீட்டில் கலகம் நேரிடுவது - வீடு பழுதாகி விடுவது.

தேகத்தில் கலகம் நேரிடுவது - பிணி, மூப்பு முதலியவற்றால் உடற்கட்டுக் குலைந்துபோதல்.

முன் பின் பிறவிகள், பழுதான வீட்டை விட்டு விட்டுப் புதிய வீட்டுக்குக் குடிபோவதைப் போன்றது.

எல்லாருமே ஆகாரக்கூலி கொடுத்து வாடகை வீட்டில்தான் வசிக்கிறார்கள். இந்நாளைய வீட்டு வசதிவாரியம் போன்று கடவுள் எல்லாருக்கும் உடம்பாகிய வீட்டைக் கட்டிக்கொடுத்திருக்கிறார். சைவ உணவு கொள்ளும் உணவொழுக்கத்தாலும் பிற நல்லொழுக்கங்களாலும் நாம் தான் வீட்டைக் காப்பாற்றிக்கொண்டு பாதுகாப்பாக பலகாலம் நீடு வாழ வேண்டும். இப்படி வாழ்வாங்கு வாழ்ந்தால், இறுதிப் பிறப்பு ஒன்றில் கடவுள் சொந்த வீடு ஒன்றைக் கட்டித் தருவார். அதுதான் பேரின்பவீடு, பெரிய வீடு. அறம், பொருள், இன்பம், வீடு என்பதில் இறுதியாகச் சொல்லப்படும் வீடு. அதுதான் சொந்தவீடு. இப்போது வசிக்கும் வீடுகளெல்லாம் வாடகை வீடுகளே, சின்னவீடுகளே. பிறவிதோறும் இந்தச் சின்னவீட்டில் வசித்துத்தான் அறம், பொருள், இன்பங்களை அனுபவித்து ஜீவகாருண்ய ஒழுக்கத்தால் பேரின்ப வீட்டை, மோட்ச வீட்டை, அடைய வேண்டும்.

இப்போது நாமிருக்கும் இந்த வீடு (மனிததேகம்) சிற்றில். சிறுவர்கள் தெருவில் மண்வீடு கட்டி விளையாடுவர். பிள்ளைத்தமிழ் பாடுவதில் பத்துப்பருவங்களில் சிற்றிற்பருவம் என்பதொன்று உண்டு. நாம் எல்லாருமே சிற்றிற் பருவத்தில் தான் இருக்கிறோம். சிற்றில்லில் இருந்து இருந்து, பழகிப் பழகிப் படிப்படியாகப் பேரில்லை, பெரியவீட்டை, அழியாத சுவர்க்கவீட்டை, மோட்சவீட்டை அடையவேண்டும்.

அசுத்த பூத காரிய தேகமாகிய நமது உடம்புக்கு ஆகாரக்கூலி. பெருமான் கூறும் சுத்த பிரணவ ஞானதேகங்களுக்கு ஆகாரக்கூலி

*வேண்டுவதில்லை. அவை அமுதசித்தி பெற்ற தேகங்கள். அவற்றிற்குப் பிணி, மூப்பு, சாக்காடு இல்லை. அந்த வீடு சிதைவதில்லை. அது நித்தியதேகம். நம் பெருமானார் தான் பெற்ற இந்த பெரு நிலையை நாம் யாவரும் அடையும் பொருட்டே கீழ்க்கண்ட திருஅருட்பா பாசுரத்தில் சத்தியம் செய்து அருளுகின்றார்*

**பொத்திய மலப்பிணிப் புழுக்கு ரம்பைதான்**
**சித்தியல் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினால்**
**நித்திய மாகியே நிகழும் என்பது**
**சத்தியம் சத்தியம் சகத்து ளீர்களே.**

*இவ்வுலகத்தில் வாழ்பவரே! செறிந்த மலங்களின் பிணிப்பையுடைய புழுக்கள் நிறைந்த இந்த வுடல் ஞானம் பொருந்திய சுத்த சன்மார்க்க நெறியை மேற்கொள்வதால் அழிவில்லாத நித்யப் பொருளாய் விடும் என யாம் உரைப்பது சத்தியம் சத்தியம் என அறிவீர்களாக.*

**திருச்சிற்றம்பலம்**

# திருமந்திரத் தேன்

**பற்றாய நற்குரு புசைக்கும் பன்மலர்**
**மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்**
**நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்**
**உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே. – கொல்லாமை 487**

*திருவடிப் பேற்றைப் பற்றுதற்குரிய வாயில் சிவகுருவினைப் பற்றுதல். பற்றுதலென்பது அத்தகைய சிவ குருவினைப் பூசிப்பதாகும். அச்சிவ குரு பூசைக்கு வேண்டத்தக்கன புறத்துக்காண்கின்ற மணஞ்சேர் பல மலர்கள் (துணைப்பூ) மட்டுமன்றி அகத்துக் காணவேண்டிய கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய்தவம், அன்பு என்பன எட்டும் நற்பண்புகளாகிய ஒண்மலர்கள். இவை எட்டும் முறையே இறைவனின் எட்டு குணங்களும் நம்மாட்டுப் பதிதற்காம் இயையுடைக் குறிப்பாகும்.* ***'எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி மட்டலரிடு வார்வினை மாயுமால்'*** *என்னும் அப்பர் அருமறையால் எட்டுப்பூக்கள் கொண்டு வழிபடும் எழில் பெறப் படுகின்றது காண்க. புறத்தே காணப்படும் துணைப்பூ என்பது பாற்கலனை (பால் பாத்திரம்) ஒக்கும். அகத்தே காணப்படும் கொல்லாமை முதலிய எட்டும் பாலை ஒக்கும். மேலும் ஒருமையுடன் தியானம் செய்யும் சித்தம் (முதலிய நான்கும்) தீபமும் மாலையும் ஆகும். உயிரே படையற் பொருளாகிய அமுதமாகும். வழிபடும் இடம் தலையுச்சியாகிய பிரமரந்திரம் ஆகும்.*

**திருச்சிற்றம்பலம்**

# தெய்வத் தீந்தமிழ்

## திருஅருட்பா



அன்புடை யவரேஎல் லாம்உடை யவரே
    அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவ ரேஎன்
வன்புடை மனத்தைநன் மனமாக்கி எனது
    வசஞ்செய்வித் தருளிய மணிமன்றத் தவரே
இன்புடை யவரேஎன் இறையவ ரேஎன்
    இருகணுண் மணிகளுள் இசைந்திருந் தவரே
என்புடை எனைத்தூக்கி எடுத்தீர் இங் கிதனை
    எண்ணுகின் றேன்அமு துண்ணுகின் றேனே. 1

காற்றாலே புவியாலே ககனமத னாலே
    கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
    கோளாலே பிறவியற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
    மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
    எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே. 2

அறியாத பருவத்தே என்னைவலிந் தழைத்தே
    ஆடல்செயும் திருவடிக்கே பாடல்செயப் பணித்தார்
செறியாத மனச்சிறியேன் செய்தபிழை எல்லாம்
    திருவிளையாட் டெனக்கொண்டே திருமாலை அணிந்தார்
பிறியாமல் என்னுயிரில் கலந்துகலந் தினிக்கும்
    பெருந்தலைவர் நடராயர் எனைப்புணர்ந்தார் அருளாம்
அறிவாளர் புறப்புணர்ச்சி எனைஅழியா தோங்க
    அருளியதீண் டகப்புணர்ச்சி அளவுரைக்க லாமே. 3

– திருஅருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

## Advertisement


### மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

### Schemes starts @ INR 2400/=

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



### Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755

# மறையின் துணையுடன்

உலகத்தில் பல போகப்பொருட்கள் இருக்கின்றன. அவைகளை அடைவதற்காக மட்டுமே நம் முயற்சியையும் உழைப்பையும் நேரத்தையும் செலவிடுகின்றோம். ஆனால் இங்கு எல்லாவற்றிற்கும் மேலான ஒன்றை அடைந்தால் நாம் பெற வேண்டியதைச் பெற்றுக்கொள்ளலாம் என்று ஞானியர்கள் அருளியுள்ளனர். அதுதான் **"பரம்பொருள்."**

அந்த பரம்பொருள் "இயற்கை உண்மை வடிவாகவும், இயற்கை விளக்க வடிவாகவும், இயற்கை இன்ப வடிவாகவும் விளங்குகிறது" என்பதனை நம் போன்றோர் யாவரும் அறியும் பொருட்டு திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் அருளிய **'திருஅருட்பா'** என்னும் மாமறை மிக எளிமையாக வழிகாட்டுகிறது. அப்பரம்பொருளை அடைவதற்கு இம்மறையை நாம் துணைக்கொண்டு ஏற்றுவது அவசியம். அவை அல்லாமல் நம் அற்ப அறிவிற்கு எட்டிய யுக்திகளை மட்டும் உபயோகம் செய்தால் பெறற்கு அரிது. ஏனெனில், நாம் நம் யுக்திகளை உபயோகப்படுத்தி பல உலக விஷயங்களை சாதிக்கலாம். ஆனால் பரம்பொருளானது மனித அறிவிற்கும் யுக்திக்கும் அப்பார்பட்டது. நம் சிந்தனைக்கு உட்படாத விஷயங்களை யுக்தியால் தீர்மானம் செய்ய முடியாது என்பதே உண்மை.

சில பொருட்கள் நம் புலன்களுக்கும், சிந்தனைகளுக்கும் அப்பாற்பட்டவையாக இருக்கின்றன. அதனால்தான் இங்கு யுக்தியால் தீர்மானம் செய்ய முடியாதென்று கூறப்படுகிறது. இதற்கு உதாரணமாக, காற்றை எடுத்துக்கொள்ளலாம். அதை நம் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால், காற்று உள்ளதா? என்று கேள்வி கேட்கிறோமா? இல்லை. ஏனென்றால் காற்றை நம் ஸ்பரிசத்தினால் உணருகின்றோம், காற்றினால் அசையும் இலைகளின் மூலம் கண்டுகொள்கிறோம். இந்த நிலையில் ஒருவன், "எனக்குக் காற்றைக் காட்டு என்று சொல்கிறேன். நீயோ என்னை இலையைப் பார்க்கச் சொல்கிறாயே" என்று கேட்கலாம். அவ்வாறு கேட்பவனுக்கு நாம் என்னதான் சொல்வது? ஒன்று மட்டும் செய்யலாம். அவனது மூக்கைப் பலாத்காரமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது அவன், "விட்டுவிடு, விட்டுவிடு, எனக்கு உயிரே போய்க் கொண்டிருக்கின்றது. என்னால் மூச்சு விடவே முடியவில்லை" என்று கதறுவான். அப்பொழுது நாம் அவனிடம், "நீதானே காற்றை பார்க்க முடியவில்லை ஆகையால் காற்று இல்லை என்று கூறினாய். நீ பார்க்காத காற்று உனக்கு வேண்டும் என்று மட்டும் எப்படிச் சொல்லுவாய்?" என்று கேட்கலாம். அப்பொழுது தவித்துக்

கொண்டிருக்கும் அவன் எப்படியாவது விடுதலை பெற்று, "அப்பாடா! இந்தக் காற்று இல்லாமல் எப்படி உயிர் வாழ முடியும்?" என்று கூறுவான். இப்படியாக நாம் காற்றை நிரூபிக்க முடியும்.

சில விஷயங்களை நாம், கண்ணால் பார்த்து தீர்மானம் செய்ய முடியும். நாம் நெருப்பு, மலை, பொருட்கள் போன்ற பலவற்றை கண்ணால் பார்த்துத் தீர்மானம் செய்யலாம். அவ்வாறே வேறு சில விஷயங்களைக் காதுகளால் கேட்டால்தான் நம்மால் தீர்மானம் செய்ய முடியும். இதற்கு உதாரணம் சங்கீதம் ஆகும். ஒரு செவிடன், "சங்கீதம் எப்படி இருக்கின்றது? நீ நன்றாக இருக்கின்றது என்று சொன்னாயே, அதை எனக்குத் தெரியப்படுத்து" என்று சொன்னால் நம்மால் என்னதான் செய்ய முடியும்? கைகளால் சைகைகள் செய்து, "இது இவ்வாறு இருக்கின்றது; ஆகையால் நன்றாக உள்ளது" என்று காண்பிக்கவா முடியும்? சங்கீதத்தைக் காதால் கேட்டால்தான் அதன் சுவையைத் தெரிந்துகொள்ள முடியும். ஒருவனுக்குக் காது கேட்கவில்லை என்றால் அவனுக்குச் சங்கீதத்தின் தன்மையைப் புரிய வைக்க இயலாது. அதேபோல்தான், நாம் நம் புலன்களால் பரம்பொருளை அறியவோ அடையவோ இயலாது.

அவ்வாறு புலன்களுக்கு அப்பாற் பட்டதாக ஒரு பொருள் இருந்தால் அதை எவ்வாறுதான் நாம் அடைவது?

அதற்கு ஒரு சற்குருவையும் அவர் அருளிய மறையையும் மற்றும் மார்க்கத்தையும் இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும். சூரியனை நாம் தெரிந்துகொள்ள விரும்பினால் அங்கு சென்றுவிட்டா வரமுடியும்? முடியாது. அதைத் தெரிந்து கொள்வதற்காக வானவியல் சாஸ்திரத்தைப்பற்றி அறிந்துக் கொள்வது அவசியமாகிறது. அதற்கு முதலில் அந்த சாஸ்திரத்தில் ஆழ்ந்த நம்பிக்கைகொண்டு தக்க ஆசான் மூலம் அரிய முடியும். அதேபோல் நாம் பரம்பொருளைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமெனில் ஞானியர்களையும் அவர்கள் இயற்றிய மறைகளையும் துணைகொள்ளவேண்டியுள்ளது. இதனையேதான் மேலே குறிப்பிட்டதுபோல் திருஅருட்பா எனும் தெய்வதீந்தமிழ் அருட்பாசுரங்களின் துணை நமக்கு தேவைப்படுகின்றது.

ஆகையால் நாம் அனைவரும் திருஅருட்பாவை பற்றிக்கொண்டு பிறவி எனும் பெருங்கடலை கடந்து உய்வோமாக.

**என்னே அதிசயமீ தெவ்வுலகீர் என்னுரையைப்**

**பொன்னே எனமேற் புனைந்து கொண்டான் – தன்னேரில்**

**நல்ஆர ணங்கள்எலாம் நாணியவே எல்லாஞ்செய்**

**வல்லான் திருக்கருணை வாய்ப்பு.** – திருஅருட்பா

**திருச்சிற்றம்பலம்**

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**குணமுதற் கருவிகள் கூடிய பகுதியில் 571**
**அணைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 572**

வெளிகளிலெல்லாம் முதல்வெளியாகக் கூறப்பட்டது பகுதிவான்வெளி. அப்பகுதி வெளியில் குணமுதற் கருவிகள் (முக்குணங்கள்) வகுக்கப்பெற்றுள்ளன.

மூலப் பகுதியிலிருந்தே முக்குணங்களும் தோன்றுகின்றன.

முக்குணங்களில் சத்துவ குணம் ஒன்றே கொள்ளத்தக்கது. ஏனைய இரு குணங்கள் இராசத குணமும், தாமச குணமும் கொள்ளத் தகாதவை; தள்ளத்தக்கவை.

சத்துவ குணமுடைய மார்க்கமே சத்மார்க்கம் - சன்மார்க்கம். சத்துவ குணமுடையவர்களே சாதுக்கள்.

**மனமுதல் கருவிகள் மன்னுயிர் வெளியிடை 573**
**அனமுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 574**

மனமுதற் கருவிகள் - மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்களாகிய அகக் கருவிகள்
மன்னுயிர் வெளியிடை - மன்னும் உயிர் வெளியிடையே
அனமுற வகுத்த - பொருத்தமுற வகுத்தருளிய
அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி

மன்னும் - மிகவும்; பெரும்பான்மையும்; பொருந்தும்
மன்னுதல் - நிலைபெறுதல்
மன்னுயிர் - ஆன்மா; சிவன்

“மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ்நிறீஇத்தாம் மாய்ந்தனரே” என்னும் ஆன்றோர் வழக்கைக் காண்க. -புறம் 165

இங்கு, உயிர்வெளியை மன்னுயிர் வெளி என்றருளினார்.

**காலமே முதலிய கருவிகள் கலைவெளி 575**
**ஆலுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 576**

காலமே முதலிய கருவிகள் - காலம் முதலிய கருவிகளை
கலைவெளி - கலைவெளியில்
ஆலுற வகுத்த - ஆமாறு வகுத்தருளிய
அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி

*காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய கருவிகளுக்கு இடமாக இருப்பது கலாகாசம் (கலைவெளி).*

*காலமே முதலிய கருவிகள் எனக் காலத்தை ஒரு கருவியாக இங்கே வள்ளற்பெருமான் கூறுகிறார். காலம் ஒரு தத்துவம்.*

*பதி, பசு, பாசம் என்பன சித்தாந்த முப்பொருள். இம் முப்பொருளுண்மையே சைவசித்தாந்தத்திற்கு அடிப்படை. இப்படி வேறு ஒரு முப்பொருளை, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் கூறியுள்ளார். முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன தொல்காப்பியர் கூறும் முப்பொருள். ஐம்பூதங்களாலான இவ்வுலக வாழ்வை அனுபவிப்பதற்கு இம்முப்பொருள்களை இயற்கை (இறை) படைத்தளித்துள்ளது. நிலம், பொழுது, (இடம், காலம்,* Space, Time*) ஆகிய இரண்டும்* **முதற்பொருள்.** *உலகில் படைக்கப் பெற்றுள்ள நுகர்பொருள்கள் அனைத்தும்* **கருப்பொருள்.** *அனுபவிக்கும் ஐந்திணை வாழ்க்கை முறைகள்* **உரிப்பொருள்.** *தொல்காப்பியரின் இம்முப்பொருள் வகுப்பு எண்ணிஎண்ணி வியத்தற்குரியது.*

*இடம் -* Space *- எல்லையற்றது. விரிந்து கொண்டே இருக்கிறது. அதன் விரிவை இன்னும் அளந்து முடிக்கவில்லை. காலமும் -* Time *- எல்லையற்றது. எல்லையற்ற நெடுங்காலம் இன்னும் விரிந்து கொண்டே செல்கிறது. அதன் எல்லையே இன்னும் அளந்து முடிவு காணவில்லை. இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் (எதிர்காலம்) என்று முக்காலமாய் முடிவற்ற காலமாய் அது இயன்று கொண்டுள்ளது. இறந்தகாலம் எவ்வளவு காலமோ? நாம் அறியோம். நிகழ்காலம், இந்தக் கணப்பொழுது, அடுத்த கணத்தில் இறந்த காலமாக ஆகிவிடும், வருங்காலம் வந்து விடும்.*

*"சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும், இனி எதிர்காலத்தின் சிறப்பும்" என்றொரு பாடல் பெரிய புராணத்தில் உண்டு. மதுரைக்கு அழைக்கப்பெற்ற திருஞானசம்பந்தப் பெருமானை அமைச்சர் குலச்சிறையார் வரவேற்று உபசரிக்கும் நிகழ்ச்சியில் குலச்சிறையார் கூற்றாக வருவது.*

**சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்**
**இனி எதிர்காலத்தின் சிறப்பும்**
**இன்று எழுந்தருளப் பெற்ற பேறு இதனால்**
**எற்றைக்கும் திருவருள் உடையோம்**
**நன்றியில் நெறியில் அழுந்தியநாடும்**
**நல்தமிழ் வேந்தனும் உய்ந்து**
**வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும்**
**மேன்மையும் படைத்தனம் என்பார்**

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் (முதல்நான்கு வரிகள்) அப்படியே நம் வள்ளற்பெருமானுக்கும் பொருந்தும்.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் - தொல்காப்பியர்
திருவள்ளுவர் காலந்தொடங்கிச் சமயகுரவர் நால்வர்
ஆழ்வார்கள் பட்டினத்தார் தாயுமானவர் காலங்களின்
பழுதிலாத்திறமும்

இனி எதிர்காலத்தின் சிறப்பும் - இனிவரும் எல்லையற்ற
எதிர்காலத்தின் சிறப்பும்

இன்று எழுந்தருளப்பெற்ற பேறுஇதனால் - இப்போது
அண்மைக் காலத்தில் வள்ளற்பெருமான் எழுந்தருளிச்
சமரச சுத்த சன்மார்க்கத்தை நிறுவியருளிய பேறு இதனால்

எற்றைக்கும் திருவருள் உடையேம் - இனி என்றென்றும்
எல்லையற்ற எதிர்காலத்தில் எக்காலத்திலும்
திருவருளை உடையோம்.

என நாம் கொள்ளலாம்.

சென்ற காலம், எதிர்காலம், நிகழ்காலம் பற்றி நினைக்கும் போது படித்தவர்களுக்கு இந்தப் பாடல்தான் முதலில் நினைவுக்கு வரும்.

மக்களின் வாழ்நாட்காலத்தைக் கணக்கிடுபவனுக்குக் காலன் என்றே பெயர். காலம் உயிர் போன்றது என்று கூற வேண்டும். பொன், போனால் வரும். உயிர், போனால் வராது. இறைவன் காலத்தை வென்றவர், காலாதீதர். வள்ளற்பெருமான் வழியில் நடந்தால், சமரச சுத்த சன்மார்க்கத்தில் ஒழுகினால் நாமும் காலத்தை வெல்லலாம். காலன் அணுகான், மரணமிலாப் பெருவாழ்வு பெற்றுக் காலாதீதராக என்றும் இருக்கலாம்.

காலத்தின் அருமையை உணர்ந்து செயலாற்ற வேண்டும். இது வள்ளலார் காலம், இனி எந்நாளும் வள்ளலார் காலம்.

“காலமே முதலிய கருவிகள்” என்ற வள்ளற்பெருமானது வாக்கு இவ்வளவு தூரம் சிந்திக்க வைக்கிறது. இன்னும் சிந்திக்காலம். விரிவஞ்சி விடுத்து மேற்செல்வோம்.

**துரிசறு கருவிகள் சுத்தநல் வெளியிடை 577**
**அரசுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 578**

துரிசறு கருவிகள் - ஆணவம், கன்மம், மாயை என்னும் துரிசுகளை (மலங்களை) அறுக்கும் கருவிகளை

*சுத்தநல்வெளியிடை - சுத்த நல்வெளியில்*

*அரசுற வகுத்த - ஆட்சி செய்யுமாறு வகுத்தருளிய*

*அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி*

*சுத்த அலர் வெளி என அடி 560 இல் கூறப்பெற்றதே இங்கு, சுத்தநல்வெளி எனப்பட்டது. சுத்த வெளி, சுத்தமானது ஆதலின் நல்வெளியாயிற்று.*

*முன் சொன்ன வெளிகளில்,*

*குணம் முதலிய கருவிகளைப் பகுதிவான் வெளியிலும்*

*மனம் முதலிய கருவிகளை உயிர்வெளியிலும்*

*காலம் முதலிய கருவிகளைக் கலைவெளியிலும்*

*துரிசாகிய மலங்களை அறுக்கும் கருவிகளைச் சுத்த வெளியிலும்*

*அருட்பெருஞ்ஜோதி அரசுற வகுத்தருளியிருக்கிறது.*

*இத் தத்துவ வெளிகளையும், கருவிகளையும் அறிந்து அனுபவித்துச் சன்மார்க்க நெறியில் ஒழுகினால் பெற்றுக் கொள்ள வேண்டியதைப் பெற்றுக்கொள்ளலாம்.*

**இவ்வெளி எல்லாம் இலங்க அண்டங்கள் 579**

**அவ்வயின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி 580**

*இவ்வெளி எல்லாம் - இதுவரை கூறப்பெற்ற (இப்பத்து) வெளிகள் எல்லாமும்*

*இலங்க - அது அதற்கு உரிய முறைமையில் விளங்கும்படி*

*அண்டங்கள் - பலவேறு அண்டங்களை*

*அவ்வயின் - அவ்வவ் முறைமையுடன்*

*அமைத்த - அமைத்தருளிய*

*அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி*

*வெளிவகை விரி இவ்வளவில் நிறைவு பெறுகிறது.*

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# பாடலும் பொருளும்

**கருவிற் கலந்த துணையேஎன்**
**கனிவில் கலந்த அமுதேஎன்**
**கண்ணிற் கலந்த ஒளியேஎன்**
**கருத்திற் கலந்த களிப்பேஎன்**
**உருவிற் கலந்த அழகேஎன்**
**உயிரிற் கலந்த உறவேஎன்**
**உணர்விற் கலந்த சுகமேஎன்**
**னுடைய ஒருமைப் பெருமானே**
**தெருவிற் கலந்து விளையாடுஞ்**
**சிறியேன் தனக்கே மெய்ஞ்ஞான**
**சித்தி அளித்த பெருங்கருணைத்**
**தேவே உலகத் திரளெல்லாம்**
**மருவிக் கலந்து வாழ்வதற்கு**
**வாய்த்த தருணம் இதுஎன்றே**
**வாயே பறையாய் அறைகின்றேன்**
**எந்தாய் கருணை வலத்தாலே. – திருஅருட்பா 4626**

*கருவிலேயே என் உயிரிற் கலந்த துணைவனே! என் மனம் கனிந்துருகுமிடத்து அக்கனிவிற் கலந்து இனிக்கும் அமுது போல்பவனே! என் கண்ணிற் கலந்து ஒளிரும் ஒளியாகியவனே! என் மேனியிற் கலந்து நிலவும் அழகுருவாயவனே! என் உயிர்க்குயிராய் உற்று நிற்கும் உறவாகியவனே! என் உணர்வோடு உணர்வாய் ஒன்றிய சுகப் பொருளே! என்னையுடைய ஒன்றாகிய பெருமானே! தெருவின்கண் பிற சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடும் சிறியவனாகிய எனக்கு மெய்ம்மை சான்ற ஞான சித்தியை அளித்தருளிய பெரிய கருணை யுருவாகிய தேவனே! உலகத்தில் வாழ்கின்ற உயிர்த் திரள் யாவும் தம்மிற் கலந்து வாழ்வதற்கு வாய்த்த சமயம் இதுவேயென்று நின்னுடைய திருவருள் வன்மையால் வாய் பறையாகவும், நா கடிப்பாகவும் கொண்டு விளம்புகின்றேன்.*

*தாய் வயிற்றில் கருப்பாசயத்தில் யான் கருவாயிருந்தபோதே கலந்து கொண்ட துணைமை நலம் தோன்ற, “கருவிற் கலந்து*

துணையே" என இயம்புகின்றார். மனம் அன்பாற் கனிகின்றபோது ஓர் இன்பம் ஊற்றெழுவது பற்றி, "கனிவிற் கனிந்த அமுதே" என்றும், கண்ணாகிய உறுப்பும் மணியும் உளவாயினும் ஒளியில்லையாயின் பயனின்மையின் பயப்பாடு கருதி ஒளி தருதலால், "கண்ணிற் கலந்த ஒளியே" என்றும், உள்ளத்தில் உவகை தோன்றுமிடத்து இரண்டிற்குமுள்ள தொடர்ப்பு புலப்பட, "கருத்திற் கலந்த களிப்பே" என்றும் இசைக்கின்றார். என்பு தோல் போர்த்த உடம்புக்கும் அதன்கண் இலகும் அழகுக்கும் உரிமை தோற்றுவிக்கும் சிறப்பு விளங்க, "என் உருவிற் கலந்த அழகே" எனவும், உயிர்க்குயிராகும் கலப்புத்தோன்ற, "என் உயிரிற் கலந்த உறவே" எனவும் இயம்புகின்றார். ஒருமை பெருமான் - ஒன்றாகிய இறைவன். ஞானசித்தி - ஈண்டுத் திருவருள் ஞானம் கைவரப் பெறுதல். உலகத் திரள் என்பது உலகத்திலுள்ள உயிர்த் தொகுதியைக் குறித்து நிற்கிறது. வேற்றுமை நோக்காது ஒருமை யுணர்வும், சமரசத் தன்மையும் எய்தி வாழ்வதையே வடலூர் வள்ளல் சுத்த சமரச வாழ்வெனக் கொண்டவராதலின், அக்கொள்கையை உலகிற்குரைக்கின்றேன் என்கின்றாராதல் விளங்க, "வாயே பறையாய் அறைகின்றேன்" என மொழிகின்றார். நாக் கடிப்பாக 'வாய்ப்பறை அறைதல்' என்பது பண்டையோர் சொல் வழக்கு. கடிப்பு - பறையை அறையும் குறுங்கோல்.

திருச்சிற்றம்பலம்

**Advertisement**



# திருக்குறள்

***தத்துவ, யோக, ஞான உரை***



தயவுதிரு
ஆர். குப்புசாமி எம்.ஏ

பக்: 1067 விலை: ரூ.1100

டெமி அளவு / கெட்டி அட்டை

**மேலை மற்றும் இந்திய தத்துவத்தின் சாரத்தோடு, தமிழர் மெய் இயலையும், யோக மரபையும் உள்ளடக்கிய பார்வையுடன் திருக்குறளை மிக விரிவாக ஆராயும் நூல்.**

தொடர்புக்கு
**லீலா பதிப்பகம்,**
9, ஏழாவது குறுக்குத் தெரு,
பிருந்தாவனம் சாலை,
பேர்லேண்ட்ஸ், சேலம் - 636004
போன்: +91 98427 51510
email: r.kuppusamy@gmail.com

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

| | |
|---|---|
| **காலை உணவிற்கு** | **- ரூ.2,500/-** |
| **மதிய உணவிற்கு** | **- ரூ.6,500/-** |
| **இரவு உணவிற்கு** | **- ரூ.3,500/-** |
| **பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு** | **- ரூ.4,000/-** |
| **பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு)** | **- ரூ.2,500/-** |
| **அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு)** | **- 15 லிட்டர்** |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:**

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

*அருள்திரு* **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - *606 604.*

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற **வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு** மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

**ஆண்டு சந்தா ரூ.120**

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். 5 வருட சந்தா ரூ.600/- தொடர்புக்கு: 8012680865

*www.vallalarmission.org*
*vallalartrust@gmail.com*
*www.facebook.com/vallalarmission*
*Vallalarmission. Cell no: +91 99427 76351*





# கோசாலை

அன்பு உள்ளங்களே!



உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

**பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்**
**கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புக்கு: 8883590659, 7502026565**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly October 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி


பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

**நாள்:** 29-10-2017, ஞாயிற்றுக் கிழமை

**இடம்:** அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.



- **அகவல் பாராயணம்** - சன்மார்க்க அன்பர்கள்
- **சிறப்பு சத்சங்கம்** - சன்மார்க்க சாதுக்கள்
- **ஜோதி தியானம்**
- **திருவருட்பா இசைக் கச்சேரி**
- **ஜோதி வழிபாடு**

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 75020 26565, 99651 50531

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865